பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
28 10 2024 **MONDAY** 6 30 **PM**
வணக்கம் - மாநில செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

1. நீர் ஆதாரங்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. நாடு அனைத்து துறைகளிலும் விரைவான வளர்ச்சியை கண்டு வருவதாக மத்திய அரசு கூறியுள்ளது.

3. இலங்கை கடற்படையினரால் சிறை பிடிக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்கள் 12 பேரை உடனடியாக விடுவிக்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் மத்திய அரசை வலியுறுத்தியுள்ளார்.

4. கரும்பு விவசாயிகளுக்கான சிறப்பு ஊக்கத்தொகையை திமுக அரசு உடனடியாக விடுவிக்க வேண்டும் என்று அஇஅதிமுக வலியுறுத்தியுள்ளது.

5. உலக மல்யுத்த சாம்பியன் போட்டி **Albania**-வில் இன்று தொடங்குகிறது.

>>>><<<<

நீர் ஆதாரங்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

குஜராத் மாநிலம், **Amreli**-யில் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை தொடங்கி வைத்து அவர் பேசினார்.

வேளாண் துறையின் வளர்ச்சியில் நீர் இன்றியமையாத பங்கு வகிப்பதை சுட்டிக்காட்டிய பிரதமர், இதனை கருத்தில் கொண்டு நீர் மேலாண்மை திட்டங்களுக்கு மத்திய அரசு கூடுதல் முக்கியத்துவம் அளித்துள்ளதாக தெரிவித்தார்.

>>>><<<<

நாடு அனைத்து துறைகளிலும் விரைவான வளர்ச்சியை கண்டு வருவதாக மத்திய கல்வி அமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் கூறியுள்ளார்.

புவனேஷ்வர் ஐஐடி-யின் பட்டமளிப்பு விழாவில் இன்று கலந்து கொண்டு அவர் உரையாற்றினார்.

வலிமையான இந்தியாவை உருவாக்குவதற்கு இளையோர் பங்களிக்க வேண்டும் என்றும் அமைச்சர் கேட்டுக் கொண்டார்.

>>>><<<<

இலங்கை கடற்படையினரால் சிறை பிடிக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்கள் 12 பேரை உடனடியாக விடுவிக்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் மத்திய அரசை வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக, வெளியுறவு அமைச்சர் திரு. ஜெய்சங்கருக்கு எழுதியுள்ள கடிதத்தில் அவர் இக்கோரிக்கை விடுத்துள்ளார்.

நாகையை சேர்ந்த 12 மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் நேற்று- முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளதை அவர் அக்கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

தற்போதைய நிலவரப்படி இலங்கையின் பிடியில் 140 மீனவர்களும், 200 மீன்பிடி படகுகளும் உள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இப்பிரச்சினைக்கு உயர் முன்னுரிமை அளித்து, மீனவர்களையும் மீன்பிடி படகுகளையும் உடனடியாக விடுவிக்க தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும் என்றும் முதலமைச்சர் அந்த கடிதத்தில் கோரியுள்ளார்.

>>>><<<<

தீபாவளி பண்டிகையை பாதுகாப்பாக கொண்டாட தேவையான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருவதாக மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் கூறியுள்ளார்.

இன்று சென்னையில் தீயணைப்புத்துறை சார்பில் நடைபெற்ற விழிப்புணர்வு நிகழ்ச்சியில் பங்கேற்ற பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

பட்டாசுகளை பாதுகாப்பாக வெடிப்பதற்கான நெறிமுறைகள் அடங்கிய துண்டு பிரசுரங்கள் வெளியிடப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

( சவுண்ட் பைட் - மா. சு 54 செகண்ட்ஸ் )

>>>><<<<

தமிழகத்தில் திமுக அரசு பொறுப்பேற்ற பின்னர் 2 ஆயிரத்து 500 நியாவிலைக் கடைகள் பிரிக்கப்பட்டு, புதிய கடைகள் உருவாக்கப்பட்டுள்ளதாக உணவு அமைச்சர் திரு. சக்கரபாணி கூறியுள்ளார்.

திண்டுக்கல் மாவட்டம், கள்ளிமந்தயத்தில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், குடும்ப அட்டை கோரி பெறப்படும் விண்ணப்பங்களில் தகுதியான நபர்களுக்கு 15 நாட்களில் அவை வழங்கப்படுவதாக தெரிவித்தார்.

இதுவரை 17 லட்சம் புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

>>>><<<<

கரும்பு விவசாயிகளுக்கான சிறப்பு ஊக்கத்தொகையை திமுக அரசு உடனடியாக விடுவிக்க வேண்டும் என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இக்கோரிக்கையை விடுத்துள்ள அவர், தீபாவளி பண்டிகைக்கு முன்னர் இந்த தொகை வழங்கப்படும் என்று மாநில அரசு அறிவித்ததை சுட்டிக்காட்டியுள்ளார்.

இருப்பினும், இந்த தொகையை விடுவிப்பதற்கான எந்த நடவடிக்கையையும் திமுக அரசு மேற்கொள்ளவில்லை என்றும் திரு. எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

>>>><<<<

தமிழகத்தில் உள்ள கலை அறிவியல் கல்லூரிகளில் கௌரவ விரிவுரையாளர்களை நியமிக்கக்கூடாது என்று பாமக வலியுறுத்தியுள்ளது.

இதுதொடர்பாக, அக்கட்சியின் தலைவர் திரு. அன்புமணி ராமதாஸ் விடுத்துள்ள அறிக்கையில், நிரந்தர உதவிப் பேராசிரியர்கள் தான் நியமிக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளார்.

கௌரவ விரிவுரையாளர் நியமனம் என்பது, சமூகநீதிக்கு எதிரானது என்று திரு. அன்புமணி ராமதாஸ் கூறியுள்ளார்.

>>>><<<<

லாட்டரி அதிபர் திரு. மார்ட்டின், அவரது மனைவி உள்ளிட்டோருக்கு எதிரான முறைகேடு வழக்கை முடித்து வைத்து, விசாரணை நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை சென்னை உயர்நீதிமன்றம் ரத்து செய்துள்ளது.

இதுதொடர்பாக அமலாக்கத்துறை சார்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவை விசாரணை செய்த நீதிபதிகள் திரு. எஸ்.எம். சுப்பிரமணியம், திரு. சிவஞானம் அமர்வு இதற்கான உத்தரவை பிறப்பித்தது.

மத்திய குற்றப்பிரிவு காவல்துறையினரும், அமலாக்கத்துறையும் இவ்வழக்கின் விசாரணையை தொடர்ந்து மேற்கொள்ளுமாறும் அந்த உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>>>><<<<

சென்னை வேளச்சேரி – கடற்கரை இடையேயான பறக்கும் ரயில் சேவை நாளை முதல் மீண்டும் தொடங்கவுள்ளதாக தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

இந்த வழித்தடத்தில் சிந்தாதிரிப்பேட்டை – கடற்கரை இடையேயான ரயில் சேவை கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதல் ரத்து செய்யப்பட்டிருந்தது.

>>>><<<<

மத்திய அரசின் லட்சாதிபதி பெண் திட்டத்தின் கீழ், மகளிர் சுயஉதவி குழுக்களில் உள்ள பெண்கள் கடனுதவி பெற்று ஒரு லட்சம் ரூபாய் வருமானம் ஈட்டலாம் என்று பாங்க் ஆப் இந்தியா வங்கியின் செயல் இயக்குநர் திரு. கார்த்திகேயன் கூறியுள்ளார்.

இன்று தூத்துக்குடியில் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

(சவுண்ட் பைட் - கார்த்திகேயன் 55 செகண்ட்ஸ்)

>>>><<<<

மாவட்டச் செய்திகள்

தமிழகத்திலிருந்து கேரளாவுக்கு கடத்த முயன்ற ரேசன் அரிசியை காவல்துறையினர் பறிமுதல் செய்தனர். இதுதொடர்பாக 8 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

>>>><<<<

திருவள்ளூர் மாவட்டத்தில் மாசு மற்றும் விபத்தில்லா தீபாவளி தொடர்பான விழிப்புணர்வு பேரணி இன்று நடைபெற்றது.

>>>><<<<

தூத்துக்குடி மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப் பணிகளில் 80 சதவீதம் நிறைவடைந்துள்ளதாக மேயர் திரு. ஜெகன் பெரியசாமி கூறியுள்ளார்.

>>>><<<<

திருவாரூர் மாவட்டத்தில், தீபாவளி பண்டிகையை முன்னிட்டு சமூக பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் முதியோர் ஓய்வூதியம் பெறும் பயனாளிகளுக்கு இலவச வேட்டி சேலை வழங்கப்படும் என்று ஆட்சியர் திருமதி. சாருஸ்ரீ கூறியுள்ளார்.

>>>><<<<

நீலகிரி மாவட்டம், உதகை நகராட்சியை மாநகராட்சியாக தரம் உயர்த்தினால், அதில் கேத்தி பேரூராட்சியை இணைக்கக்கூடாது என்று வலியுறுத்தி 68 குக்கிராமங்களைச் சேர்ந்த ஆயிரத்துக்கு மேற்பட்டோர் பங்கேற்ற அமைதிப் பேரணி இன்று நடைபெற்றது.

>>>><<<<

அரியலூர் மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கான நலத்திட்ட உதவிகளை ஆட்சியர் திரு. ரத்தினசாமி இன்று வழங்கினார்.

>>>><<<<

தேனி, மதுரை மற்றும் சென்னையில் பொதுமக்களின் வங்கிக் கணக்குகளை தவறாக பயன்படுத்தி பண மோசடியில் ஈடுபட்ட 6 பேரை காவல்துறையினர் கைது செய்துள்ளனர்.

>>>><<<<

விளையாட்டுச் செய்திகள்

உலக மல்யுத்த சாம்பியன் போட்டி **Albania**-வில் இன்று தொடங்குகிறது.

இப்போட்டியில் இந்தியாவின் சார்பில் **Udit, Manish Goswami, Kirti, Mansi** உள்ளிட்ட 12 பேர் பங்கேற்கின்றனர்.

>>>><<<<

19 வயதுக்குட்பட்டோருக்கான உலக குத்துச்சண்டை சாம்பியன் போட்டியில், இந்தியாவின் **Chanchal, Anjali Singh, Vini, Nisha, Parthavi Grewal** அரையிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

அமெரிக்காவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் பிரிவு காலிறுதி ஆட்டங்களில் இவர்கள் வெற்றிபெற்றனர்.

மகளிர் 54 கிலோ எடைப்பிரிவில் **Supriya Devi** –யும், ஆடவர் 50 கிலோ எடைப்பிரிவில் **Risi Singh-**ம் காலிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

**>>>><<<<**

உலக **Ju-Jitsu** தற்காப்புக்கலை சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Suchika Tariyal** தங்கப்பதக்கம் வென்றார்.

கிரீஸில் நடைபெற்ற இப்போட்டியின் மகளிர் 63 கிலோ எடைப்பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

**>>>>END<<<<**